பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 02 | செவ்வாய்க்கிழமை | 19.09.2023 | அதிர்வு 49

## உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கத் தீர்மானம்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெற விருந்த 2023 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான 02▶

# ஐ.நா. பொதுச் சபையில் ரணில்; இங்கு குண்டர்கள் சண்டித்தனம்

## திருமலை அடாவடி சம்பவம் தொடர்பில் வெட்கித் தலைகுனிய வேண்டும் அரசு

### சம்பந்தன் காட்டம்



சீ.ஏ.தமிழ்மாறன் -

"அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு சென்றுள்ள நிலையில், இங்கு திருகோணமலையில் பட்டப்பகலில் பொலிஸார் முன்னிலையில் குண்டர்கள், தமிழர்கள் மீது மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்திச் சண்டித்தனம் காட்டியுள்ளார்கள். 02▶

# கஜேந்திரன், பிரேமரத்ன மீதான சம்பவங்களை விசாரித்துக் குற்றவாளிகளைக் கைது செய்க!

## சட்டம், ஒழுங்கு அமைச்சரிடம் மனோ வலியுறுத்து

"நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது திருகோணமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது அனுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையும் ஒரே மாதிரியான சட்டம், ஒழுங்கு பிரச்சினையாகக் கருதி, விசாரித்து, குற்றவாளிகளைக் கைது செய்யுங்கள்."

- இவ்வாறு சட்டம், ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸிடம் நேற்று வலியுறுத்தினார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற 02▶



# எம்.பிக்களுக்கு உயிராபத்து! சூத்திரதாரிகள் கைதாகுவர்!!

## பிரதமர் தினேஷ் உறுதி

– சுடர் திலீபன் –

"மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொண்ட அனைவரும் கைது செய்யப்படுவார்கள். அந்தச் சம்பவங்களின் பின்னாலுள்ள சூத்திரதாரிகளும் கைது செய்யப்படுவார்கள்." 02▶



### மட்டக்களப்பில் கோர விபத்து

# பெண் குழந்தை உட்பட இருவர் பரிதாப மரணம்



மட்டக்களப்பு – சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்திவெளி பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, மற்றுமொருவர் படுகாயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, காத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வாகனம் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதியதில் 02▶

## இரகசியம்



நியாயமான விடயங்களில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பிடிக்கப் போட்டி நடப்பது வழமை.

அநியாயமான விடயங்களில் முன்னிலை பெறவும் போட்டி நடக்குமா?

இலங்கை மத்திய வங்கியின் ஒரு பிரிவு அளித் 02▶

## பெண் குழந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் 4 வயது பெண் குழந்தை, வான் சாரதி (வயது 54) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் விபத்தில் படுகாயமடைந்த 49 வயது பெண் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த இருவரின் சடலங்களும் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## கஜேந்திரன், பிரேம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினருமான மனோ கணேசன்.

தான் சொன்ன மாதிரி செய்வதாக அமைச்சர் தன்னி டம் உறுதியளித்தார் என்றும் மனோ எம்.பி. குறிப்பிட்டார்.

இது பற்றி சபாநாகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வுக்கும் தொலைபேசியில் தான் நேற்று அறிவித்தார் என்றும் மனோ எம்.பி. மேலும் தெரிவித்தார்.

## ஐ.நா. பொதுச் சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் தொடர்பில் அரசு வெட்கித் தலைகுனிய வேண்டும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"திருகோணமலையில் நேற்றுமுன்தினம் தியாக தீபம் திலீபனை நினைவேந்தும் ஊர்தி மீது தாக்குதல் மேற்கொண்ட குண்டர் குழு, அந்த ஊர்தியில் பயணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மீதும், அவரின் கட்சியின் செயற்பாட்டாளர்கள் மீதும் மிலேச்சத்தனமான முறையில் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தக் கொடூர சம்பவத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தியாகி திலீபனின் தியாகம் உன்னதமானது. அவரின் தியாகத்தை எவரும் கொச்சைப்படுத்த முடியாது. அவரை நினைவேந்துவதை எவரும் தடுக்க முடியாது.

பொலிஸார் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனைச் சுற்றிவளைத்து அந்தக் குண்டர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினருக்கே பாதுகாப்பு இல்லாத இந்த நாட்டில் மக்களின் பாதுகாப்பு எப்படி இருக்கும் என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தத் தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்வது மட்டுமன்றி அவர்களைத் தூண்டி விட்டவர்களையும் கைது செய்ய வேண்டும். அதேவேளை, தாக்குதல் நடைபெற்றபோது அந்த இடத்தில் வேடிக்கை பார்த்த பொலிஸாருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றார்.

## உயர்தரப் பரீட்சையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கும் தீர்மானம் ஏற்கனவே கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தனது முகப் புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

"வெளிநாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பான முடிவு இறுதி செய்யப்படும்" - என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## எம்.பிக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன உறுதியளித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது குண்டர் குழு தாக்குதல் நடத்தியுள்ளது. அதே வேளை, நேற்றுமுன்தினம் அனுராத புரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரு சம்பவங்கள் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்குவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. கொட்டன்கள் கொண்டு தாக்கி, துப்பாக்கியால் சுட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த குழுவினர் கைது செய்யப்படுவார்கள். இந்தச் சம்பவங்களின் பின்னாலுள்ள சூத்திரதாரிகளும் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்படுவார்கள்.

நாட்டில் இன வன்முறையை மீண்டும் தூண்டச் சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது." - என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துள்ள மதிப்பீட்டு அறிக்கை, அநியாயமான விடயங்களிலும் முதலிடத்தை பெறுவதற்கான போட்டி தீவிரமாகத்தான் இருக்கும் போல என்ற எண்ணத்தைத் தந்துள்ளது.

மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு இந்த வாரம் ஒரு மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டது. அது தேசிய பண மோசடி மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு அபாய மதிப்பீடு பற்றியது.

இப்போது நாட்டில் குற்றவியல் ரீதியில் வருமானத்தை ஈட்டும் முக்கிய பிரிவாக லஞ்சம் மற்றும் ஊழல் விடயம் மேலிடத்திற்கு வந்திருப்பதாக அந்த அறிக்கை மதிப்பீடு செய்கிறது.

இந்த வகையில் பணம் ஈட்டும் விடயத்தில் 2017 இல் ஐந்தாவது இடத்திலிருந்த லஞ்சம் மற்றும் ஊழல் விவகாரம் இப்போது இரண்டாம் இடத்துக்கு வந்து விட்டதாம்.

இந்த வரிசையில் முதலிடம் எதற்கு என்பது வாசகர்களாகிய உங்களுக்குத் தெரிந்ததுதான். அது போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை விவகாரம் தான்.

முன்னர் குறிப்பிட்டபடி இரண்டாம் இடம் லஞ்சம் மற்றும் ஊழலுக்கு.

மூன்றாம் இடம் எதற்குத் தெரியுமா? சுங்கத்துறையை உச்சிக் கொண்டு நடைபெறும் கடத்தல் விடயங்களினால் ஈட்டப்படும் நிதித்தொகைக்கு அந்த மூன்றாம் இடம் கிட்டுகிறது.

முதல் இடத்தில் இருக்கும் போதைப் பொருள் பாவனையானது இலங்கையில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவிலிருந்து பல புதிய வகை போதைப் பொருள்கள் மற்றும் எல்.எஸ்.டி, கிரிஸ்டல் மெத் (ஐஸ்) மற்றும் கொக்கெய்ன் போன்ற சைக்கோட்ரோபிக் பொருள்களுக்கு இப்போது விரிவடைந்துள்ளது என அந்த அறிக்கை அடையாளம் காட்டுகிறது.

நாட்டில் மோசமடைந்து வரும் ஊழல் மோசடி போன்றவையும் அவற்றின் மூலம் சட்டவிரோதமாக ஈட்டப்படும் பணமும், போகின்ற போக்கில் போதைப் பொருள் கடத்தலில் ஈட்டப்படுவதை மிஞ்சினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# விசுவமடுவில் திலீபனின் நினைவேந்தல்









தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தலின் நான்காம் நாள் நிகழ்வு நேற்று விசுவமடுவில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

விசுவமடு பிரதேசத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் நேற்று மாலை 5 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை இரண்டு மாவீரர்களின் சகோதரனும் தேராவில் துயிலும் இல்லப் பணிக்குழு செயலாளருமான யோகன் ஏற்றிவைத்தார். தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கான மலர்மாலையை ஞானசௌந்தரி அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மலர் வணக்க நிகழ்வை விசுவமடு பிரதேச தென்னிந்திய திருச்சபையின் பங்குத்தந்தை வணபிதா அசோகன் அடிகளார் ஆரம்பித்து வைக்க தொடர்ந்து சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் மலர்வணக்கம் செலுத்தினர்.

தலைமை அஞ்சலி உரையை நிகழ்வுக்குத் தலைமை வகித்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் நிகழ்த்தினார். தொடர்ந்து வணபிதா அசோகன் அடிகளாரும் அஞ்சலி உரையை நிகழ்த்தினார்.

# அமெரிக்க – இலங்கை வர்த்தகம், முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான கவுன்சில் கூட்டம் கொழும்பில்



அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான 14 ஆவது கவுன்சில் கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இலங்கை அரசின் சார்பில் சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் பிரதம பேச்சாளர் கே.ஜே.வீரசிங்கவும், அமெரிக்கத் தரப்பில் இருந்து தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்கவின் ஐ.நாவுக்கான பதில் உதவி வர்த்தகப் பிரதிநிதியான பிரெண்டன் லிஞ்சும் இந்தத் தொழில்நுட்ப மட்டக் கூட்டத்துக்கு இணைத் தலைமை தாங்கினர்.



வர்த்தகம், முதலீடு, சுங்கம், தொழிலாளர் உறவுகள், புலமைச் சொத்து, விவசாயம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவன அதிகாரிகள் இந்தப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் மற்றும் ஜனாதிபதியின் பதில் செயலாளர் சாந்தனி விஜேவர்–தன ஆகியோர் சந்திப்பின் ஆரம்ப நிகழ்வில் கருத்துத் தெரிவித்தனர்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான கவுன்சில் கூட்டத்தில் , முதலீட்டு சூழலை பாதிக்கும் கொள்கைகள்,அண்மைய தொழிலாளர் சட்ட மறுசீரமைப்புகள், புலமைச் சொத்து பாதுகாப்பு மற்றும் அமுல்படுத்தல் , சுங்கம் மற்றும் வர்த்தக வசதி அளித்தல், வர்த்தகத்தைப் பாதிக்கும் தொழில்நுட்ப தடைகள், ஆடைகள், இரத்தினங்கள் மற்றும் நகைகள் அதே போன்று விவசாயத்துக்கான சந்தைப் பிரவேசம் உட்பட இரு நாடுகளும் பரந்த அளவிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான விவகாரங்களில் கவனம் செலுத்தின.

டிஜிட்டல் பொருளாதாரம், இரத்தினங்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில், மலர் வளர்ப்பு, படகு கட்டும் துறைகள் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சி வணிகமயமாக்கல் தொடர்பான ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவி குறித்தும் ஆராயப்பட்டது.

இலங்கையில் நேரடி வெளிநாட்டு முதலீட்டை அங்கீகரிப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவது மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் வலுவான மற்றும் வெளிப்படையான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது உள்ளூர் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் என்பதை அமெரிக்காவும் இலங்கையும் அங்கீகரித்துள்ளன.

நல்லாட்சியில் கவனம் செலுத்தி, இலங்கையில் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும் வலுவான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை

(5ஆம் பக்கம் பார்க்க...)



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்புக் கூறல் அவசியம்

இலங்கையின் பொருளாதாரத்தை நாசமாக்கியவை ஊழலும் மோசடியும் என்கிறோம்.

ஆனால், அதைவிடப் பெருந்தொகை இழப்பு நிதி விவகாரங்களில் பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படாத போக்கினால் ஏற்பட்டுள்ளது என சுயாதீன மற்றும் நீதியான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் ('பவ்ரல்') நிறைவேற்று இயக்குனர் றோஹண ஹெட்டியாராய்ச்சி கூறுகிறார்.

நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு ஒன்றின் முன் சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

நிதி விடயங்களில் பொறுப்பு கூறல் கடப்பாடு கொண்ட அதிகாரிகள் அதில் சிரத்தை எடுக்காமல் விடுவது ஊழல், மோசடி மற்றும் நிதித் தில்லுமுல்லுகள் பெருமளவில் நடப்பதற்கும் பெருகுவதற்கும் பிரதான காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

நிதிப் பொறுப்புக்கூறலுக்குப் பதில் அளிக்க வேண்டிய அதிகாரிகள் அந்தப் பொறுப்புக்குக் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. அதுவே லஞ்சம், ஊழல், மோசடி போன்றவை பெருகப் பிரதான காரணம் என்று நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு இருக்கின்றது .

உதாரணத்திற்கு இப்போது அரச வைத்தியசாலைகளில் அவசியம் மருந்து பொருள்கள் கொள்வனவில் பெரும் மோசடி இடம் பெற்றுருப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

அவசர தேவை கருதி, வழமையான கேள்விப்பத்திர முறைமைகள், விதிமுறைகளை மீறி இந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. வழக்கமான நடைமுறைகள், விதிமுறைகளை மீறிய கொள்வனவு என்பதனால்தான் மிகச் சுலபமாக ஊழல், முறைகேடுகள் நேர இடம் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அவ்வாறு மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு செயற்கையாகவே ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டு, விடயம் கழுத்தை நெரிக்கும் விவகாரமாக மாறும் வரை, நிலைமை சீர் கெட இடமளிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தப் பின்புலத்திலேயே மருந்து பொருள்கள் வழமையான விதிமுறைகளுக்கு மாறாக, எக்கச்சக்க விலைகளில், அவசர அவசரமாக வாங்கித் தள்ளப்பட்டிருக்கின்றன. பெருந்தொகைத் தரகு பணம் இதன்மூலம் சம்பந்தப்பட்ட தரப்புகளால் சூறையாடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இப்போது அந்த மருந்து கொள்வனவில் மருந்து வாங்கும் போது இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்தே சிந்திக்கப்படுகின்றது.

ஆனால், அத்தகைய நிலைமையை ஏற்படுத்தும் விதத்தில், மருந்து தட்டுப்பாடு மோசமான கட்டத்தை எட்டும் வரை, பார்த்திருந்த அதிகாரிகள் யார், அவர்கள் மீது பொறுப்பு கூறல் கடப்பாட்டிற்கமைய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்பவற்றைத் தேடிப் பார்த்தால் அப்படி எதுவுமே நடந்திராதமை அம்பலமாகும்.

ஊழல், மோசடி போன்ற - நாட்டையும் சமூகத்தையும் சீரழிக்கும் - அரக்கர்கள் ஒழிய வேண்டுமானால் அது தொடர்பில் தவறிழைக்கும் அதிகாரிகள் முதலில் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஊழல்,மோசடியைக் கணிசமாகவேனும் கட்டுப்படுத்த வாய்ப்புக் கிட்டும்.

## அமெரிக்க - இலங்கை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

களை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை இதன்போது அமெரிக்கா வலியுறுத்தியது.

அண்மையில் முன்மொழியப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டம் பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்களை இலங்கை முன்வைத்ததோடு இலஞ்சம் மற்றும் அனைத்து வகையான ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்க அரசின் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சியைக் கோரியது.

பைடன் – ஹாரிஸ் நிர்வாகத்தில் தொழிலாளர்களின் உரிமைகளை ஆதரிப்பதற்காக வர்த்தக பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அமெரிக்கா, இலங்கைக்கு உறுதியளித்துள்ளது.

தொழிலாளர் சட்டங்களை திருத்தியமைக்கும் செயல்முறை மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் தரங்களுக்கு இணங்கிச் செயற்படுவதில் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் இலங்கை விளக்கமளித்தது.

தொழிலாளர் சட்டங்களை உருவாக்கும் போது அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்தாலோசிக்க வேண்டியதன் அவசியத்தையும் பொது மக்கள் கருத்தறிவதற்கான நியாயமான காலப்பகுதியொன்றை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அமெரிக்கா வலியுறுத்தியது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கைப் பிரதிநிதிகள், தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் போது பின்பற்றப்படும் நடைமுறைகள் குறித்தும் விளக்கமளித்தனர். இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிலாளர் சட்டத் திருத்தங்களை அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தும் போது, அதற்கு தேவையான ஆதரவை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக அமெரிக்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விவசாயப் பொருட்களுக்கான வர்த்தகத் தடைகளைக் மட்டுப்படுத்துவதை அமெரிக்கா ஊக்குவித்தது. இலங்கையின் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்காக, கால்நடைத் தீவனம் உட்பட பல்வேறு விவசாய பொருட்கள் ஏற்றுமதிக்கான அதிக சந்தை வாய்ப்பை பெற்றுத்தருவதாக அமெரிக்கா கருத்து வெளியிட்டது.

நிலையான விவசாய அபிவிருத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் உயிரியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்தும் அமெரிக்க மற்றும் இலங்கைப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

இயற்கை மசாலாப் பொருட்கள் மற்றும் செறிவூட்டும் உயர் பெறுமதியுடைய மற்றும் பெறுமதி சேர் விவசாய உற்பத்திகளுக்கான சந்தைப் பிரவேசம் தொடர்பிலும் இலங்கை ஏற்றுமதியாளர்கள் மற்றும் அமெரிக்க நுகர்வோருக்கு நன்மை பயக்கும் வகையில் ஆடைகள், ஆபரணங்கள் மற்றும் தோல் சார் உற்பத்திகளுக்கான தீர்வை வரிச்சலுகைகளை நீடித்தல் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகள் கவனம் செலுத்தியிருந்தனர்.

இருதரப்பு வர்த்தகம் மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்கான வழிமுறையாக புலமைச் சொத்து பாதுகாப்பு மற்றும் அதனை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இரு நாடுகளும் உறுதிப்படுத்தின.

இலங்கையின் புலமைச் சொத்துச் சட்டத்தின் திருத்தம் மற்றும் அதற்கமைவான ஏனைய சட்டங்கள் தொடர்பிலான நடைமுறை அம்சங்கள் குறித்தும் கருத்து வெளியிடப்பட்டது. புலமைச் சொத்துச் சட்ட திருத்தங்கள் தொடர்பாக இலங்கையுடன் இணைந்து செயற்படுவதை அமெரிக்கா ஏற்றுக்கொண்டதோடு, அதன் திறன் மேம்பாட்டுக்கு பங்களிப்பு வழங்கவும் இணக்கம் தெரிவித்தது.

2024 இல் நடைபெறவிருக்கும் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு கூட்டத்திற்கு முன்னதாக வர்த்தக விவகாரங்களில் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்த இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்தன. துறைசார் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அரசமைப்பை மீறியமைக்காக கஜேந்திரனை உடனடியாகவே கைது செய்ய வேண்டுமாம்!

## நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பில் சிங்கள சமூகத்தின் மத்தியில் கோபம், வெறுப்பு காணப்படுவது இயல்பானது எனவும், இவ்வாறான பின்னணியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரை நினைவுகூரும் வகையில் சிங்களவர்கள் வாழும் பகுதிக்கு ஊர்தி பவனி செல்வது சிங்களவர்களை ஆத்திரத்துக்குள்ளாக்கி இன முரண்பாட்டை ஏற்படுத்தும் என்றும் பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அரசமைப்பை மீறியுள்ளார் என்றும், எனவே உடனடியாக அவர் கைது செய்யப்பட வேண்டும் எனவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்,

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உருமய கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது உதய கம்மன்பில மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலை புலிகள் அமைப்பினரின் நோக்கங்களுக்காக உயிர் தியாகம் செய்த திலீபனை நினைவு கூரும் வகையில் நாடளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கிழக்கு மாகாணத்தில் இருந்து வடக்கு மாகாணத்துக்கு ஊர்தி பவனியில் செல்லும் போது சிங்களவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

திலீபன் என்பவர் இந்த நாட்டை பிளவுப்படுத்தும் நோக்கத்துடன் செயற்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்.

விடுதலைப் புலிகளின் நோக்கத்துக்காகவே தனது உயிரைத் திலீபன் தியாகம் செய்தார். விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்டு இந்த நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்திலான வாகனத்தில் திலீபனின் உருவப்படத்தை வைத்து கிழக்கு மாகாணத்தில் இருந்து வடக்கு மாகாணம் நோக்கி வாகன பவனியில் செல்வதற்கு யார் அனுமதி வழங்கியது?

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரான திலீபனின் உருவபடத்தை சுமந்து பொது இடத்தில் பகிரங்கமாக செல்வதற்கு அரச அதிகாரி அனுமதி வழங்கியிருந்தால் அவர் அரசமைப்பின் 157 (அ) பிரிவை முழுமையாக மீறி பிரிவினைவாதத்துக்கு அனுசரனை வழங்கியுள்ளார் என்றே கருத வேண்டும்.

நாட்டின் அரசமைப்பை மீறும் வகையில் அரச அதிகாரி செயற்படுவதற்கு அரசியல்வாதியொருவர் அழுத்தம் பிரயோகித்திருந்தால் உடனடியாக அந்த அரசியல்வாதி கைது செய்யப்பட்டு அரசமைப்பின் 157(அ) பிரிவு பாதுகாக்கப்பட வேண்டும்.



சாதாரண சிங்கள சமூகத்தினரை இலக்காக கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பு 300 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது. பிரிவினைவாதத் தாக்குதலால் ஒட்டுமொத்த சிங்கள சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது. சிங்களவர்கள் தமது உறவுகளை இழந்துள்ளார்கள்.

விடுதலை புலிகள் அமைப்பு தொடர்பில் சிங்கள சமூகத்தின் மத்தியில் கோபம், வெறுப்பு காணப்படுவது இயல்பானதே. இவ்வாறான பின்னணியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரை நினைவுகூரும் வகையில் சிங்களவர்கள் வாழும் பகுதிக்கு ஊர்தி பவனி செல்வது சிங்களவர்களை ஆத்திரத்துக்குள்ளாக்கி இன முரண்பாட்டை ஏற்படுத்தும் ஒரு சூழ்ச்சியாகும்.

2007ஆம் ஆண்டு 57 ஆவது இலக்கத்தின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் 3 ஆவது பிரிவுக்கு அமைய இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெறும் வகையில் மக்களை ஆத்திரமூட்டும் வகையில் முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளும் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

அத்துடன், அவை பாரதூரமான குற்றச்சாட்டாக கருதப்படுவதால்தான் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபருக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றத்துக்கு வழங்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அரசமைப்பின் 157 (அ) பிரிவை மீறியுள்ளார். மறுபுறம் சர்வதேச அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சமவாய சட்டத்தின் 3ஆவது பிரிவை மீறியுள்ளார். ஆகவே இரண்டு காரணிகளையும் முன்னிலைப்படுத்தி அவர் கைது செய்யப்பட வேண்டும்.

இச்சம்பவம் தொடர்பில் எவரும் முறைப்பாடளிக்கவில்லை என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆகவே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கு எதிராக நாங்கள் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடளிப்போம். - என்று தெரிவித்துள்ளார்.

# பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பங்களாதேஷ் சபாநாயகர் சந்திப்பு



பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் பங்களாதேஷ் சபாநாயகர் ஷிரின் ஷர்மின் சவுத்ரி ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அலரி மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது என பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இருநாட்டு நாடாளுமன்றங்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் மேம்படுத்துவதற்காக நாடாளுமன்ற செயற்பாடுகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில், புதிய வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவது குறித்து பிரதமர் இதன்போது கவனம் செலுத்தியுள்ளார்.

இவ்வாறான ஒத்துழைப்பின் மூலம் இருநாடுகளினதும் ஜனநாயக நாடாளுமன்ற செயற்பாடுகளை வலுப்படுத்த முடியும் என பங்களாதேஷ் சபாநாயகர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மருந்து உற்பத்தியில் பங்களாதேஷிடம் காணப்படும் விசேட நிபுணத்துவத்தை இலங்கையின் மருந்து உற்பத்திக்காக பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என்று இந்த சந்திப்பின் போது பிரதமர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# கஜேந்திரகுமார் - கஜேந்திரன் 24 ஆம் திகதி ஜெனிவா பயணம்



இலங்கை தொடர்பான பக்க நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்டப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகவும் எதிர்வரும் 24 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஜெனிவா செல்லவுள்ளனர்.

அங்கு இடம்பெறவுள்ள சந்திப்புக்கள் குறித்து இன்னமும் உறுதியாகத் தீர்மானிக்கப்படாத போதிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரிகள், இணையனுசரணை நாடுகள் மற்றும் உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுடன் விசேட சந்திப்புக்களை நடாத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரின் ஓரங்கமாக, வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிக்குழுவின் அறிக்கை மீதான கலந்துரையாடல் நடைபெறவிருப்பதுடன் இதன்போது இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது.

தொடக்கநாள் அமர்வில் இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் உள்ளடக்க அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் என்பன தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப் உரையாற்றினார்.

அதனைத்தொடர்ந்து உயர்ஸ்தானிகரின் அறிக்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக பதிலளித்தமையுடன், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் உறுப்புநாடுகளின் உரைகளும் இடம்பெற்றன.

இந்நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இக்கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான பக்க நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன. அதன்படி, இன்று செவ்வாய்கிழமை வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிக்குழுவின் அறிக்கை மீதான கலந்துரையாடல் நடைபெறும்.

இதன்போது, இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள், அச்சம்பவங்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிதல், நீதியை நிலைநாட்டல், இழப்பீடு வழங்கல் மற்றும் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பன பற்றியும் விரிவாக ஆராயப்படும்.

# புதையல் தோண்டிய பிக்கு உட்பட ஏழு பேர் பதுளைப் பகுதியில் கைது

பதுளை- மிகஸ்பிட்டிய கொஹன பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு அருகில் புதையல் தேடிய குற்றச்சாட்டில் தேரர் உட்பட 7 பேர் பதுளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து புதிய வகை டிஜிட்டல் ஸ்கானிங் இயந்திரம் மற்றும் ஏராளமான பூஜை பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அம்பலாங்கொட பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் 50 வயதுடைய தேரர் ஒருவரும் மற்றும் கம்பஹா பகுதியைச் சேர்ந்த பூசாரி ஒருவரும் உட்பட 7 பேர் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கப்பற்றப்பட்ட உபகரணங்களுடன் பதுளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட இருந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்தினபுரி மாணவர்கள் 30 பேர் ஆஸ்பத்திரியில்!



இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் 30 மாணவர்கள் நேற்று சுகவீனமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உணவு விஷமானதன் காரணமாக அந்தப் பாடசாலையின் மாணவர்கள் மாவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி, திகன பிரதேசத்தில் ,டம்பெற்ற விளையாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மீண்டும் திரும்பிக் கொண்டிருந்த போது ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 30 மாணவர்கள் ,வ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# உண்மையை கோட்டாவும் மறைத்தார் இப்போது ரணிலும் கூட மறைக்கிறார்

## எப்படியும் வெளிக்கொணர்வோம் என்கிறார் சஜித்



"உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை கோட்டபாயவும் மறைத்தார். இப்போது ரணிலும் மறைக்கிறார். நாம் எப்படியாவது உண்மையை வெளிக்கொண்டு வர வேண்டும்."

– எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறியிருக்கின்றார்.

முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என நாட்டு மக்கள் கோரும் இவ்வேளையில்,உயிர்த்த ஞாயிறு தாக்குதலையும் அதனால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையையும் அரசியலாக்காது முழுமையான உண்மையைத் தேடுவதே எதிர்க்கட்சியின் நோக்கம். அரசாங்கம் உண்மைகளையும் தரவுகளையும் மறைக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எமக்கும் சரியான உண்மைகள் தெரியாது என்பதனால், இது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்துமாறே எதிர்க்கட்சி கோருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு உண்மையை மறைப்பது கைகளில் இரத்தம் தோய்ந்த நபர்களின் சதியோ என்று சந்தேகம் எழுகிறது. இந்தத் தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்றாலும்,இங்கு உண்மை மறைக்கப்படுவது மாத்திரம் இடம் பெற்றுள்ளதால் அரசியல் சாதகங்களைப் பொருட்படுத்தாமல்,முழுமையான உண்மையை இங்கு வெளிக்கொணர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடியபோதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரிகளையும் ஏனைய காரணத்தை கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட அனைவரையும் தண்டிப்பார் என அளித்த வாக்குறுதிகளின் பிரகாரமே ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 இலட்சம் மக்கள் ஆணை கிடைத்தது. அவர் அந்த உண்மையைத் தேடாது,உண்மையைக் கண்டறியாமல் பயங்கரவாத செயலை விசாரித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் பலரையும் அந்த நடவடிக்கைகளில் இருந்து நீக்கினார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு செயற்பாடுகளைப் பார்க்கும் போது உண்மையை தேடுவதை விட உண்மை மறைக்கப்பட்டுள்ளதையே மேற்கொண்டுள்ளனர் எனத் தோன்றுகிறது. இதன் காரணமாக உண்மையைக் கண்டறியும் பொறுப்பைக் கூட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புறக்கணித்துள்ளார்.

அவ்வாறே,தற்போதைய அரசாங்கமும் ஜனாதிபதியும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பின்பற்றி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மையை மறைத்து வருகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நேர்மையான, நம்பகமான,பக்கச்சார்பற்ற தேசிய விசாரணையைத்தான் நான் விரும்பினாலும்,கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது,தேசிய விசாரணைகளில் அதிக நம்பிக்கை இல்லை. எனவே இவ்வாறான நிலையில் சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் முதல் பாகம் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தது. இரண்டாவது மற்றும் மூன்றாவது பாகங்கள் குறைந்தபட்சம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் பரிசீலிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் மேற்பார்வையில் மாத்திரம் அதனைப் பரிசீலிக்கச் சந்தர்ப்பம் வழங்குவதில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் கூட மீறப்படுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல் 4 காணொலி தொடர்பில் விசாரணை நடத்த அரசாங்கம் நியமித்துள்ள புதிய குழு குறித்து இந்தத்வ்தாக்குதலில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களும் கர்தினாலும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இவ்வாறு புதிய குழுக்களை நியமிப்பதாலும் கூட உண்மை மூடி மறைக்கப்படுகின்றது. – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# கஜேந்திரன் மீதான தாக்குதல் கனடாவிலிருந்தும் கண்டனம்

திருகோணமலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு கனடா கடுமையான கண்டனம் வெளியிட்டுள்ளது.

திருகோணமலையில் நேற்று முன்தினம் திலீபனின் நினைவேந்தல் பேரணியில் பொலிஸார் முன்னிலையில் குழுவொன்று இந்தத் தாக்குதலை நடத்தியிருந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த பேரணியில் திலீபனின் உருவப் படத்தை ஏற்றிச் சென்ற வாகனம் குழுவொன்றினால் சுற்றிவளைக்கப்பட்டது.

இதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட குழுவினர் மீதும் திலீபனின் உருவப்படத்தை தாங்கிய வாகனத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலை கண்டித்துள்ள கனேடிய அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தாக்குதலின்போது பொலிஸார் வேடிக்கை பார்த்தனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

'சட்டத்தை வெட்கமின்றி மீறுபவர்கள் அனுபவிக்கும் தொடர்ச்சியான தண்டனையற்ற சுதந்திரத்தை' இந்த சம்பவம் எடுத்து காட்டுவதாகவும் கனேடிய அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தமது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காதமை ஏமாற்றமளிப்பதாக கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் சல்மா சாஹிட் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் சட்டத்தின் ஆட்சி சமமானதாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கை வரும் சீனக் கப்பலால் தென்னிந்தியாவுக்கு ஆபத்து!

## - பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தல்

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவிருக்கும் ஷி யான் உளவுக் கப்பலுக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சீனாவிலிருந்து புறப்பட்டுள்ள ஷி யான் 6 என்ற உளவுக் கப்பல் அடுத்த மாதம் இலங்கையில் உள்ள கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களுக்கு வரவிருக்கிறது என்றும் அங்கு 17 நாட்கள் தங்கியிருந்து ஆராய்ச்சியில் ஈடுபடப் போகிறது எனவும் கிடைத்துள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

சீன உளவுக் கப்பலின் ஆராய்ச்சி என்பது தென் மாநிலங்களை உளவு பார்ப்பது தான் என்பதால், இது தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. சீன உளவுக் கப்பல் ஷி யான் இரு நாட்களுக்கு முன் மலேஷியாவை அடுத்த மலாக்கா நீரிணைக்கு வந்து விட்டது எனவும் அங்கிருந்து அக்டோபர் மாத இறுதியில் இலங்கையில் கொழும்பு, அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களுக்கு வந்து சேரும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களுக்குள் நுழைய சீன உளவுக்கப்பலுக்கு இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை என்றும், அதே நேரத்தில் அது தொடர்பான கோரிக்கை இலங்கை அரசின் ஆய்வில் இருக்கிறது எனவும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி தான் சீனக் கப்பலுக்கு அனுமதி அளிக்காதது போல இலங்கை அரசு காட்டிக் கொள்கிறது. ஆனால், கடைசி நேரத்தில் சீன உளவுக் கப்பலுக்கு இலங்கை அரசு கண்டிப்பாக அனுமதி அளிக்கும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டால், அது இந்தியாவுக்கு, குறிப்பாக தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும்.



ஷி யான் உளவுக் கப்பல் மிகவும் சக்தி வாய்ந்தது ஆகும். பல நூறு கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள அனைத்து நிலைகளையும் செயற்கைக் கோள் உதவியுடன் உளவு பார்க்கும் திறன் இந்தக் கப்பலுக்கு உண்டு.

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டாலும், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டாலும் அங்கிருந்து தமிழகத்தில் உள்ள கூடங்குளம், கல்பாக்கம் அணுசக்தி ஆராய்ச்சி மையங்களையும், சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட தென்னிந்தியாவின் ஆறு துறைமுகங்களையும் எளிதில் உளவு பார்த்து, அது குறித்த தகவல்களையும் சேகரித்து விட முடியும். அணு சக்தி ஆராய்ச்சி நிலையங்கள் இந்தியாவின் பாதுகாப்புடன் எத்தகைய தொடர்பு கொண்டவை என்பதை அறிந்தவர்களால், சீன கப்பலின் இலங்கை வருகை எத்தகைய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஷி யான் கப்பலால் இந்தியாவுக்கு ஆபத்து இல்லை என்று இந்த அச்சுறுத்தலை கடந்து செல்ல முடியாது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலும் சீனாவுக்கு சொந்தமான யுவான் வாங் என்ற கப்பல் இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி அம்பான்தோட்டை துறைமுகத்துக்கு கொண்டு வந்து நிறுத்தப்பட்டது.

அந்தக் கப்பலால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அக்கப்பல் அங்கிருந்து வெளியேற்றப்பட்டது. யுவான் வாங் 6 கப்பலால் இந்தியாவுக்கு எத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படுமோ, அதை விட மோசமான அச்சுறுத்தல் ஷி யான் கப்பலாலும் ஏற்படும்.

அதுமட்டுமின்றி, யுவான் வாங் கப்பலை விட அதிகமாக 17 நாட்களுக்கு ஷி யான் கப்பல் இலங்கை துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் என்பதால், தென்னிந்தியாவில் உள்ள பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து முக்கிய நிலைகளையும் சீனா உளவு பார்த்து தகவல்களை செகரித்து வைத்துக் கொள்ள முடியும். அதை எப்போது வேண்டுமானாலும் இந்தியாவுக்கு எதிராக சீன அரசால் பயன்படுத்த முடியாது. இது இந்தியாவுக்கு மிகவும் ஆபத்து ஆகும்.

ஆசியாவை தனது கட்டுக்குள் வைத்திருக்கும் தனது எதிர்காலத் திட்டத்துக்கு இந்தியா தான் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்று கருதும் சீனா, இந்தியாவைச் சுற்றிலும் தனது பாதுகாப்பு நிலைகளை ஏற்படுத்தி, இராணுவ ரீதியாக முடக்குவதற்கு திட்டமிட்டு வருகிறது. அதற்காகவே ஒன்றன்பின் ஒன்றாக உளவுக்கப்பல்களை அனுப்பி இந்தியாவை உளவு பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

சீனக் கப்பலின் இலங்கை வருகை என்பது ஐக்கிய நாடுகள் கடல் சட்ட உடன்படிக்கையை மீறிய செயல் ஆகும். சீனக் கப்பலை இலங்கை அனுமதிப்பது 1987 ஆம் ஆண்டு இந்திய, இலங்கை அமைதி உடன்பாட்டிற்கு எதிரான செயலாகும்.

அந்த உடன்பாட்டின்படி இலங்கை மண்ணை இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு எதிரான செயல்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

சீனக் கப்பலை அனுமதிப்பது இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதால் அதை இலங்கை அரசு ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. சீனா தொடர்பான சிக்கல்களைப் பொறுத்தவரை இலங்கை அரசு இரட்டை வேடம் போடுகிறது என்பதையும் இந்தியா புரிந்து கொள்ள வேண்டும் என்று ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

## மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலத்துக்கு மத்திய அமைச்சரவை அனுமதி!

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டமூலத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் இடம்பெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த சட்டமூலத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

பல வருடங்களாக நிலுவையில் இருந்த நிலையில் இந்த சட்டமூலத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த நிலை யில் நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படலாம் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

குறிப்பாக நேற்று தொடங்கிய நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரிலேயே மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதை உறுதி செய்யும் சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இந்த மாதம் நிறைவேற்றப்பட வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.



# அமெரிக்காவில் இரண்டு விமானங்கள் நடுவானில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

## - இருவர் உயிரிழப்பு



அமெரிக்காவின் நெவாடா மாகாணத்தில் உள்ள ரெனோ நகரில் இடம்பெற்ற தேசிய செம்பியன்ஷிப் விமான கண்காட்சியின்போது நிகழ்ந்த விமான விபத்தில் இரண்டு விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

விமான கண்காட்சியின் போது தரையிறங்க முற்பட்ட இரண்டு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது என உறுதி செய்யப்பட்டுள்ளது என்று ரெனோ ஏர் ரேசிங் அசோசியேஷன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து அந்த நாட்டின் தேசிய போக்குவரத்து பாதுகாப்பு சபை, பெடரல் விமான சேவை நிர்வாகம் மற்றும் உள்ளுராட்சி அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று வெளிநாட்டு செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

இந்த விபத்து காரணமாக மீதமுள்ள கண்காட்சி போட்டிகள் இரத்து செய்யப்பட்டன என்று அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், விபத்திற்கான காரணத்தை ஆராய்ந்து வருவதாக தேசிய போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# மிஸ் யுனிவர்ஸில் பாகிஸ்தான் அழகி!



இந்த வருடம் நடைபெறவுள்ள 72 ஆவது குளோபல் மிஸ் யூனிவர்ஸ் அழகிப் போட்டியில்ஹ முதல் முறையாக பாகிஸ்தானைச் சேர்ந்த எரிகா ராபின் என்ற 24 வயதான அழகி பங்கேற்கவுள்ளார்.

இவர் அண்மையில் இடம்பெற்ற 'மிஸ் யூனிவர்ஸ் பாகிஸ்தான்' போட்டியில் முதல் இடத்தை பெற்றதன் மூலம் இந்த வருடம் எல் சால்வடார் நாட்டில், நடைபெறவுள்ள 'குளோபல் மிஸ் யூனிவர்ஸ்' அழகிப் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

இது குறித்து எரிகா கருத்துத் தெரிவிக்கையில், நான் பணிவுடன் இந்த வெற்றியை ஏற்கிறேன். எனக்கு இது உண்மையிலேயே பெருமையான விஷயம். மிஸ் யூனிவர்ஸ் போட்டியில் கலந்து கொண்டு பாகிஸ்தானின் அழகை உலகிற்கு பறைசாற்றுவேன். ஊடகங்கள் தெரிவிக்காத அழகான கலாச்சாரம் எங்களுக்கு உள்ளது. பாகிஸ்தானியர்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள். பழகுவதற்கு அன்பானவர்கள், பெருந்தன்மையானவர்கள். பாகிஸ்தான் நாட்டின் ருசி மிக்க உணவு வகைகளை உண்டு மகிழவும், எங்கள் நாட்டின் இயற்கையழகையும், பனிமலைகளையும் மற்றும் வயல்வெளிகளையும் காணவும் அனைவரையும் அழைக்கிறேன்என்று தெரிவித்துள்ளார்.

# லிபியாவில் கண்ணிவெடி அபாயம்!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட லிபிய நகரமான டெர்னாவில் தற்போது கண்ணிவெடிகள் காரணமாக மக்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

சுத்தமான தண்ணீரைத் தேடி கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட தொலைதூரப் பகுதிகளுக்கு அவர்கள் செல்ல வேண்டி கட்டாயம் ஏற்பட்டுள்ளது. லிபியாவில் வெள்ளப பெருக்கு ஏற்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் இதனால் 11 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்துள்ளனர். 10 ஆயிரம் பேரை காணவில்லை என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சடலங்களைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன எனவும் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைந்து காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.



# ஆசியக் கிண்ண ஆட்டத்தில் ‘மேட்ச் பிக்சிங்’; இலங்கை அணிக்கு எதிராக முறைப்பாடு

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக இலங்கை அணி படுதோல்வியடைந்தமை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என புரவெசி பலய அமைப்பு பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாடொன்றை அளித்துள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் வீண் விரயத்துக்கு எதிரான புரவெசி பலய அமைப்பின் தலைவர் ஜமுனி கமந்த துஷார இந்த முறைப்பாட்டை அளித்துள்ளார்.

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி மிகக் குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தமை பலமான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

போட்டியை காட்டிக்கொடுத்துள்ளனரா என்ற சந்தேகம் எழுகிறது எனவும் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில், இலங்கை அணி 50 ஓட்டங்களுக்குள் சுருண்டு அதிர்ச்சியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியின் தோல்வியில் அரசியலா? விசாரணை தேவை என்கிறது சஜித் அணி

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை தோல்வியடைந்ததில் அரசியல் உள்ளதா? என ஆராயுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆசியக்கிண்ணப் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியடைந்தது. வெறும் 50 ஓட்டங்களை மாத்திரமே இலங்கை அணி பெற்றிருந்ததுடன், இதுவொரு வரலாற்றுத் தோல்வியாகவும் பதிவாகியுள்ளது.

இலங்கையின் இந்த மோசமான தோல்வி குறித்து பிரபல கிரிக்கெட் ஜாம்பவான்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள திஸ்ஸ அத்தநாயக்க,

இலங்கையின் தோல்வியானது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பிறந்தநாள் பரிசாக இருந்ததா?.

ஒரு தீவிரமான போட்டியை அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், அது அவ்வாறு இல்லை. போட்டி சில மணி நேரங்களில் முடிந்தது.

தோல்வியை நான் விவரிக்க விரும்பவில்லை. ஏனெனில் இது எங்கள் வீரர்களின் மன உறுதியை பாதிக்கும். எனினும், தோல்வியில் ஏதேனும் அரசியல் உள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இலங்கை சந்தித்த தோல்வியால் நாங்கள் மிகுந்த ஏமாற்றமும் வருத்தமும் அடைந்துள்ளோம்” என அவர் கூறியுள்ளார்.

விசாரணையை மேற்கொள்ளும் பொறுப்பு விளையாட்டுத்துறை அமைச்சிடம் வழங்கப்பட வேண்டுமா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள அவர்,

சமீபத்தில், விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் பொதுக் கணக்குக் குழுவான கோபாவின் முன்னிலைக்கு அழைக்கப்பட்டனர்.

இதுபோன்ற சூழ்நிலையில் ஆசியக்கிண்ண தோல்வி குறித்து விளையாட்டு அமைச்சு விசாரணை நடத்த முடியுமா? என்றார்.



# வத்தளையில் கிரிக்கெட் பயிற்சிக்கூடம் திறப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மாணவர்களின் கிரிக்கெட்டை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வத்தளை லைஸியம் சர்வதேச பாடசாலையில் கடினப் பந்து கிரிக்கெட் பயிற்சிக் கூடம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை பிரதி அதிபர் திருமதி பிரின்ஸி ரட்னாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், விடுதிப் பொறுப்பாளர் சிறிலால் பிரேமரட்ண, செயற்பாட்டு முகாமையாளர் சம்பத் அதிகாரி, விளையாட்டுக்குழுத் தலைவர் லஹிரு மதுரங்க, பாடவிதான இணைப்பாளர் அனுஷ மனோகர ரஞ்சன், பிரதம பயிற்றுவிப்பாளர் லால் சேனரட்ண, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# ‘நிஷிமுரா’ வால் நட்சத்திரத்தை மூன்று நாள்களுக்குப் பார்க்கலாம்

வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே காணக்கூடிய அனுபவமாக கருதப்படும் “நிஷிமுரா“ வால் நட்சத்திரத்தை இன்று முதக் மூன்று நாட்களுக்கு வெறும் கண்களால் பார்க்கக்கூடிய அரிய வாய்ப்பு இலங்கையர்களுக்கு கிடைத்துள்ளது.

இதனை பேராதனைப் பல்கலைக் கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் இயற்பியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதக்படி இலங்கையர்கள் இன்று செவ்வாய்க்கிழமை, நாளை புதன் கிழமை மற்றும் மறுநாள் வியாழக்



கிழமை ஆகிய மூன்று நாள்களும் மாலை 6.30 மணிக்கு தொலை நோக்கியைப் பயன்படுத்தாமல் வெறும் கண்களால் பார்க்க முடியும்.

C/2023 P1 என்றும் அழைக்கப்படும் ‘நிஷிமுரா’ வால் நட்சத்திரம் 500 வருடங்களுக்கு முன்பு பூமிக்கு மிக அருகே வந்து சென்றுள்ளது. இந்நிலையில் அது மீண்டும் தற்போது பூமிக்கு அருகே யணிக்கவுள்ளது.

மணிக்கு 386,000 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கும் நிஷிமுரா வால் நட்சத்திரத்தை சூரிய உதயத்திற்கு சிறிது நேரத்திற்கு முன்பும், சூரிய அஸ்தமனத்திற்கு சிறிது நேரத்திற்கு பிறகும் பார்க்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

அந்நிகழ்வானது மீண்டும் 2455 ஆண்டுகளிலேயே நிகழும் என்பதால் இதுவொரு அரிய வாய்ப்பு என வானிலை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# இலங்கை வருகிறார் சமந்தா பவர்



சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) தலைமை அதிகாரி சமந்தா பவர் வெகுவிரைவில் இலங்கைக்கு வருகை தரவிருக்கின்றார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

அமெரிக்க இராஜதந்திரியான சமந்தா பவர், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னர் 2013 – 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் 28 ஆவது தூதுவராகக் கடமையாற்றினார்.

அமெரிக்காவின் ஆளுமை மிக்க இராஜதந்திரிகளில் ஒருவராக நோக்கப்படுபவரும், கடந்த 2016 ஆம் ஆண்டு ஃபோர்ப்ஸ் இதழால் வெளியிடப்பட்ட உலகின் பலம்பொருந்திய பெண்களின் பட்டியலில் 41 ஆம் இடத்தில் இருந்தவருமான சமந்த பவர், கடந்த 2021 ஆம் ஆண்டு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை கடந்த ஆண்டு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த நிலையில், நாட்டின் விவசாயிகள் மற்றும் வறிய, பின்தங்கிய சமூகப்பிரிவினருக்கு அவசியமான பல்வேறு உதவிகள் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பினால் வழங்கப்பட்டன.

அதன் ஓரங்கமாக உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்திருந்த சமந்தா பவர், உரத்தையும் விவசாய நடவடிக்கைகளுக்கு அவசியமான ஏனைய பொருள்களையும் கொள்வனவு செய்வதற்கு விவசாயிகளுக்கு உதவும் வகையில் 40 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குவதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்தில் நடாத்திய ஊடக சந்திப்பில் அறிவித்திருந்தார்.

அதுமாத்திரமன்றி அங்கு கருத்து வெளியிட்ட அவர், "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை தொடர்பில் கண்காணிப்புப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டு நீண்டகாலம் கடந்திருக்கின்ற போதிலும், கடந்த காலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடப்பாடுகள் இன்னமும் போதியளவில் பூர்த்திசெய்யப்படவில்லை. நீதியைப் பெற்றுக்கொள்வதும் காணாமல்போனோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதுமே பாதிக்கப்பட்ட தரப்பினரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இன்னமும் தாய்மார் காணாமல்போன தமது பிள்ளையின் புகைப்படத்துடன் போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர். எனவே இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளில் அமெரிக்கா ஓர் துடிப்பான உறுப்பினராக விளங்குவதுடன் மேற்படி கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றது" என்றும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே அவர் மீண்டும் வெகுவிரைவில் இலங்கைக்கு வருகைதரவுள்ளார். அவருடன் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் உதவி நிர்வாக அதிகாரி அஞ்சலி கௌரும் வருகைதருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பன்குளம் விபத்தில் இருவர் படுகாயம்!



திருகோணமலை பன்குளம் பகுதியில் கப் ரக வாகனம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை – அனுராதபுரம் "ஏ – 12" வீதியினூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கப் ரக வாகனம் பன்குளம் பகுதியில் வைத்து விபத்துக்குள்ளானதில் வாகனத்தில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த இருவரும் வேலையின் நிமித்தம் அம்பாறை – காரைதீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்கையில் சாரதியின் தூக்கம் காரணமாக வாகனம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இடைநடுவில் கைவிடப்பட்டிருக்கும் வீதி நிர்மாணப் பணி மீள ஆரம்பிக்கும்

## நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தகவல்

இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள நாட்டின் வீதிக் கட்டமைப்பின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டு, அந்த வீதிகளின் நிர்மாணப் பணிகள் துரிதமாகப் பூர்த்தி செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நான் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்கும் போது நாட்டின் பல நெடுஞ்சாலைத் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன.

ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

சுமார் 18 ஆயிரம் கோடி ரூபா ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்தது.

அவ்வாறு வழங்கவேண்டியிருந்த தொகையில் தற்போது சுமார் 15 ஆயிரத்து 100 கோடி ரூபா சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சுமார் 2 ஆயிரத்தி 900 கோடி ரூபா செலுத்த வேண்டியுள்ளது. நிலுவைத் தொகை வழங்கப்படுவதால், ஒப்பந்தக்காரர்கள் மீண்டும் நெடுஞ்சாலைத் திட்டப்பணிகளை ஆரம்பத்துள்ளனர்.

கடந்த காலங்களில் செலுத்த முடியாமல் இருந்த பெரும் நிலுவைத் தொகை தற்போது வழங்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு, வீதி அபிவிருத்திப் பணிகள் குறித்து முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

யு மற்றும் டீ தர வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பராமரிக்கப்படுகின்றன.

இந்த நாட்டில் வருடாந்தம் 12,225 கிலோமீற்றர் நெடுஞ்சாலைகள் மற்றும் 312 கிலோமீற்றர் அதிவேகப் பாதைகள், 5,432 பாலங்கள், 12 மேம்பாலங்கள் போன்றவற்றை வீதி அபிவிருத்தி அதிகார சபை பராமரித்து வருகின்றது.

மக்களின் தனிப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், கல்வி, மற்றும் சுகாதாரப் பணிகளை சிறப்பாக செயற்படுத்தவும் ஒரு நாட்டின் வீதிக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானது.

இன்று அனைவரும் உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பில் கவனம் செலுத்துகிறார்கள்.

அந்த வகையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் எடுத்துச்செல்ல போக்குவரத்துக்கு வசதிகள் சிறந்த முறையில் அமைய வேண்டும்.

எனவே வீதிக்கட்டமைப்பு ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாததாக உள்ளது.

எமது நாட்டின் வீதிக் கட்டமைப்பு நன்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வீதிகளை விரிவுபடுத்தி மேம்படுத்த வேண்டும். வீதி அபிவிருத்திக்கு வெளிநாட்டு முதலீடுகள் கிடைப்பது குறைவு.

சிறிய பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளை பராமரிக்க ஆண்டுதோறும் ஏராளமான பணத்தை செலவிட வேண்டியுள்ளது.

அதிவேகப் பாதைகள் ஒரு நாட்டுக்கு அவசியம். எமது நாட்டில் ஏற்பட்ட டொலர் பிரச்சினை மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளைப் பாதித்தது.

மீரிகம, குருநாகல் அதிவேகப் பாதையின் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பொத்துஹெர தொடக்கம் கலகெதர வரையான 31 கிலோமீற்றர் கொண்ட அதிவேகப் பாதையின் முதல் 13 கிலோ மீற்றருக்கான பணிகள் வழமை போன்று இடம்பெற்று வருகின்றன.

2019 இல் ஆரம்பிக்கப்பட்ட துறைமுக நுழைவாயில் வழியிலான வீதி நாட்டிற்கு மிகவும் முக்கியமானது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் இப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. புதிய களனிப் பாலத்தில் இருந்து காலிமுகத்திடல் வரையான தூண்களுக்கு மேல் செல்லும் விசேட வீதியின் மூலம் கொழும்பு கோட்டை மற்றும் துறைமுகம் போன்ற பரபரப்பான பகுதிகளில் தற்போது நிலவக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும்.

இப் பாதையை 2024 ஆம் ஆண்டில் மக்கள் பாவனைக்குக் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கொஹுவல மேம்பாலத்தின் 85வீதம் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மேலும் ஹங்கேரிய நாட்டின் கடனுதவியின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் பேராதனை மேம்பாலத்தின் 35 வீதப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

ஒரு இலட்சம் வீதிகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 13,160 வீதிகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வீதிகள் 17,850 கிலோமீட்டர்களாகும். அதில், 5201 வீதிகள் அதாவது 6,300 கி.மீ. வீதிகளின் பணிகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்த மொத்தத் திட்டமான 17,850 கிலோமீற்றர் வீதிகளை அமைப்பதற்கு அரசாங்கம் 23 ஆயிரத்து 100 கோடி ரூபாவை மதிப்பிட்டுள்ளது.

தற்போது பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களுக்காக 16 ஆயிரம் கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் 7 ஆயிரம் கோடி ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள நாட்டின் வீதி அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் நாட்டின் நெடுஞ்சாலைகளை பராமரிக்கவும், இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்கவும் பணம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால், குறித்த பணிகளை விரைவில் நிறைவு செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது”– என நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்தார்

# பகிடிவதைக் குற்றச்சாட்டில் 57 மாணவர் இடைநிறுத்தம்

## கடந்த ஒரு வருட காலத்தில்



நாட்டில் கடந்த 12 மாதங்களில் 36 பகிடிவதை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள 17 பல்கலைக்கழகங்களில் இந்த எண்ணிக்கையிலான பகிடிவதை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக 57 மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து பகிடிவதை சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இதன்படி, பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் 11 பேர் அண்மையில் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

புதிய மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிலையங்களில் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக பொலிஸாரினால் அண்மையில் விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன்படி, 076 545 3454 எனும் வாட்ஸ்அப் இலக்கத்தின் மூலம் கல்வி நிலையங்களில் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் குறித்து அறிவிக்க முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்திருந்தார்.

# பயணப் பையில் சடலமாக மீட்கப்பட்டவர் நிதி மோசடிகளுடன் சம்பந்தப்பட்டவராம்

சீதுவ தண்டுகம ஓயாவிற்கு அருகில் பயணப் பையில் இருந்து சடலம் ஒன்று கடந்த 16ஆம் திகதி கைப்பற்றப்பட்ட நிலையில், அந்தச் சடலம் அவரின் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, மாராவில் பகுதியை சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவார் எனக் கூறி பலரிடமும் நிதி மோசடி செய்தவர் எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் தனது நிரந்தர முகவரியில் வசிக்காமல் அங்கிருந்து தலைமறைவாகி பிறிதொரு பகுதியில் வசித்து வந்த நிலையில் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பணமோசடியால் பாதிக்கப்பட்ட யாரேனும் இவரைக் கொலை செய்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நீல நிறத்திலான பயணப் பொதியிலிருந்து பொலிஸாரல் சடலமாக மீட்கப்பட்ட இந்த நபர் சில தினங்களுக்கு முன்னதாக உயிரிழந்திருக்கலாமெனவும் மேலும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# தெற்குப் பாடசாலையில் ஆயுதக் களஞ்சியசாலை



தென்னிலங்கையிலுள்ள பாடசாலையில் ஒன்றில் ஆயுத களஞ்சியசாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை, மத்தவத்த பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை ஒன்றில் கட்டப்பட்டுள்ள அறையின் மேற்கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் வெடிபொருள்கள் அடங்கிய ஆயுதக் களஞ்சியமே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் கட்டப்பட்ட அந்த அறை பயன்படுத்தப்படாத நிலையில் இவை இருந்தன எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

ரி 56 தோட்டாக்கள் - 20 , 24 மில்லி மீற்றர் தோட்டாக்கள் - 32, 9 மில்லி மீற்றர் தோட்டாக்கள் - 107 மற்றும் துப்பாக்கி ஒன்று என்பனவே மீட்கப்பட்டுள்ளன.

மேலும், தொடர்ந்து தேடுதலின் போது, டி.என்.டி. எனச் சந்தேகிக்கப்படும் 194 கிராம் வெடிப்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.09.2023




தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். இன்று வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிக்கான பாராட்டு கிடைக்கும். இது உங்கள் மனதில் மகிழ்ச்சியை அதிகரிக்க உதவும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அன்பை வெளிப் படுத்துவீர்கள்.இதனால் இருவரிடையே நல்ல புரிந் துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும். முக்கிய முதலீடுகளில் இன்று பணத்தை சேமிக்கலாம்.

இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங் கள்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். தைரியம் மற்றும் உறுதி வெற்றிக்கு வழி வகுக்கும்.

இன்று பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். நீங்கள் விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந் துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

நீங்கள் இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத் திக்கொள்ளுங்கள்.




இன்று பதட்டமும் கவலையும் காணப்படும். உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி செயலாற்றுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படலாம். சிறப்பாக திட்டமிட்டு மிகச் சரியாக பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்களின் சில கருத்துக்களை உங்கள் துணை யுடன் பகிர்ந்து கொள்ள இன்றைய நாள் உகந்ததல்ல. உரையாடும் போது கவனம் தேவை.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. என்றாலும் அதிகமாக சேமிக்க இய லாது.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். அதிக நீரைப் பருகவும்.




இன்று இழப்புகள்நேரா வண்ணம் கவனித்து செயலாற்ற வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் இறக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் துல்லியமாக முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு வன்மையாக நடந்து கொள்வீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பரா மரிக்க அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணம் அதிக அளவில் செலவாகும். தேவையற்ற செலவுகளை கண் காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்படும்.




இன்று ஓய்வில்லாமல் உழைப் பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று பயனுள்ள முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

வெளியிடங்களுக்கு சென்று இருவரும் இணைந்து மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை கழிப்பீர்கள். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் எதிர் காலத்திற்காக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்




இன்று சம்பவங்கள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் செயல்களை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். முக் கியமான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளி வைக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும் காரணத்தால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இன்று மிகுந்த எச்சரிக்கையும் சிறந்த திட்டமிடலும் தேவை.

இன்று அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொண்டால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். எனவே தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது அவசி யம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சில ஏமாற்றங்களை சந் திக்க நேரலாம். இது உங்களுக்கு வருத் தத்தை அளிக்கும். அடுத்தவர் தரும் வாக்குறுதியை நம்பாமல் உங்கள் கடின உழைப்பை நம்பி செயலாற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடச் சூழல் இன்று மகிழ்சிகரமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும்.

இன்று சில பண வரவுகள் காணப்பட்டாலும் செலவு களை சமாளிப்பது கடினமாக இருக்கும். உங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவு செய்யவும்.

உடல் உழைப்பு காரணமாக கால்களில் வலி ஏற்பட லாம். முறையான உடற்பயிற்சியும் தியானமும் சிறந் தது.




ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன்களை அளிக்கும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். உரையாடும் போது கவனம் தேவை.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகளை சந்திக்க நேரும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.09.2023




இன்று உறுதியாக நற்பலனைகள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறக் காண்பீர்கள்.

உங்கள் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள் . சக பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

பூர்வீகச் சொத்து வகையில் இன்று வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.




இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.




உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும் அவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co | www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park